**ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டிற்காக பெற வேண்டிய ரூபா 2,836,252 சம்பள மீளளிப்பு மீளாய்வாண்டிற்கான வருமானமாகக் காட்டப்பட்டிருந்தது. | நாட்குறிப்பின் மூலம் உரிய சரி செய்தல் செய்யப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | ஆண்டிற்கான வருமானங்களை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 7,071168 கூட்டுமொத்தமான 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்கு வேண்டப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற மீதிகளை உறுதிப்படுத்தும் எழுத்துமூல சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 154(1) ஆம் பந்தி | காணிகளை ஏலத்தில் விற்பனை செய்ததன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்தில் 01 சதவீதத்திற்கு சமனான வரி அறவீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ஏலவிற்பனையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப தொகையை அடிப்படையாகக் கொண்டு அந்த வரிப்பணம் அறவீடு செய்யப்பட்டிருந்த போதிலும் விற்கப்பட்ட காணிகள் தொடர்பாக காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட உறுதியின் மூலம் உள்ளபடியான விற்பனைப் பெறுமதியை உறுதிப்படுத்தி குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிப் பதிவாளர் அலுவலகத்தில் உறுதியை பதிவு செய்தல் முடிவடைந்திருக்காத துடன் அது முடிவடைந்ததன் பின்னர் உரிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். பதிவு செய்யப்பட்டுள்ள 08 காணிகளின் அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது டன் அவற்றிற்குரிய பணம் அறவிடப்பட்டுள்ளது. | உள்ளபடியான விற்பனைப் பெறுமதியை உறுதிப்படுத்திக் கொண்டு மிகுதி குத்தகைப் பணத்தை விரைவாக அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | 571(2) ஆம் பந்தி | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,484,460 தொகையான வைப்பு மீதிக்கான காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்படாமையின் காரணமாக காலாவதியான வைப்புக்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொடர்புபட்ட வைப்பு மீதிக்காக ஒரு காலப்பகுப்பாய்வினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலப்பகுப்பாய் வினைத் தயாரித்து காலாவதியான வைப்பு சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 21,025,573 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 9,817,939 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் வருமான உதவி ரூபா 6,995,790.65 ஆல் அதிகரித்தல் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானத்திற்கு காரணமாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதவரியும் வரியும் | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,683,132 தொகையான நிலுவையான வீத வரி யினை அறவீடு செய்யும் நடவடிக்கை பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. மேலும் வீத வரிக்கு உட்படும் எல்லைக்குள் அமைந்துள்ள சுற்றுலா சபையில் பதிவு செய்த ஒரு ஹோட்டலை உள்ளடக்கி 03 ஹோட்டல்களுக்காக வீதவரி வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் முடியுமான அளவு விரைவில் நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவையாக உள்ள அனைத்து வீதவரியையும் வரியையும் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ஏக்கர் வரி | | |
| மீளாய்வாண்டிற்காக 89 காணிச் சொந்தக்காரர்கள் தொடர்பாக 1036 ஏக்கர்களுக்கு அண்மித்த காணிகளுக்கு ஏக்கர் வரி அறவிடப்பட்டிருக்காததுடன் இவற்றில் சில காணிகளின் அளவு எவ்வளவு என்பது நிர்ணயிக்கப்பட்டிருக்க வில்லை. | இன்றுவரை ரூபா 15,838 பணம் கிடைத்துள்ளது. மிகுதிப் பணத்தை அறவீடு செய்வதற்கு துரித முயற்சி எடுக்கப்பட்டுள்ளதுடன் உறுதிப்படுத்தப்படாத ஆதனங்களின் தகவல்களை மீளாய்வின் மூலம் தேடிக் கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | காணியின் அளவை சரியாக நிர்ணயித்து விரைவாக குத்தகை அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

(இ) உத்தரவுப் பத்திரக் கட்டணம்

-----------------------------------------------

| | | |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் பேணப்படுகின்ற சுற்றுலாச் சபையில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டலையும் உள்ளடக்கி 03 ஹோட்டல்களில் அமுல்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு மதுபான விற்பனை பஞ்சகர்ம சேவை, நீச்சல் தடாக சேவை, ஆகிய ஏனைய வருமான மூலங்களை இனங்கண்டு அதற்காக வியாபார உத்தரவுப் பத்திர வருமானங்களை சேகரிப்பதற்கு ஒழுங்கு விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை அதேபோல அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கான வருமானத்தில் 1 சதவீதமான பணத்தை உத்தரவுப் பத்திரக் கட்டணமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 02 ஹோட்டல்கள், 2019 ஆம் ஆண்டு வரை சுற்றுலாச் பையில் பதிவு செய்தலைப் பெற்றிக்காததனால் முன்னைய ஆண்டுகளின் போது 1 சதவீத வருமானத்தைப் பெற்றுக் கொள்ளுதல் இடம்பெற்றிருக்க வில்லை. இந்த ஆண்டின் போது முன்னைய ஆண்டின் வருமானத்தில் 1 சதவீத வரிப் பணத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | வருமான மூலங்களை இனங்கண்டு அதற்காக வியாபார உத்தரவுப் பத்திர வருமானம் சேகரிக்கப்படுதல் வேண்டும். |

(ஈ) ஏனைய வருமானம்

----------------------------------

| | | |
|---|---|---|
| 2000 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் காணிகளைத் துண்டு போடும் போது சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 14,035,000 தொகையான 1499 பேச்சஸ் காணிகளை விளைதிறனாக குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது ஏதாவது வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வு செய்து அடுத்துவரும் ஆண்டின்பின்னர் குத்தகைக்கு வழங்கி வருமானத்தை சேகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | துரிதமாக உரிய ஆதனங்களை குத்தகைக்கு வழங்கி வருமானத்தை சேகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) நீதிமன்ற தண்டமும் முத்திரைக் கட்டணமும><br>2005 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக சிலாபம் மாவட்ட நீதிமன்ற அதிகாரப் பிரதேசத்திற்காக சபைக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 4,070,684 மற்றும் 2008 சனவரியிலிருந்து 2010 நவம்பர் வரை பெற வேண்டிய ரூபா 10,479,783 முத்திரைக் கட்டண வருமானம் சபையினால் இழக்கப்படும் ஆபத்து காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | இந்த ரூபா 4,070,684 தொகையான தண்டப்பணம் சம்பந்தமாக தீர்மானம் எடுப்பதற்கு 2020 திசெம்பர் 08 ஆந் திகதி நடைபெற்ற ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் பிரேரணை இலக்கம் 05:04 இன் கீழ் மேலே குறிப்பிடப்பட்ட பணத்தை பதிவழித்தல் பொருத்தமானது என பிரேரிக்கப்பட்டு அதன் பொழிப்பு மற்றும் கடிதங்களின் போட்டோ பிரதி உள்ளூராட்சி ஆணையாளருக்கு (வடமேல்) அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய நீதிமன்ற தண்டப் பணத்தையும் குத்தகைப் பணத்தையும் நாளதுவரையாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆரச்சிக்கட்டு நூல் நிலையக் கட்டிடத்தின் மேல் மாடியில் நடாத்தப்பட்டு வருகின்ற உடல் மேம்பாட்டு நிலையத்திற்காக ரூபா 859,250 பெறுமதியான உடல் மேம்பாட்டு உபகரணங்கள் பொருத்தப்பட்டிருந்தும் அதன் மூலம் சபைக்கு வருமானம் உழைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயிற்சி ஆலோசகர் ஒருவரை சேர்த்துக் கொள்வதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற்று விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் 2021 ஆகஸ்ட் 20 ஆந் திகதி நாட்டில் நிலவிய தொற்று நோய் நிலைமையின் அடிப்படையில் பயணத்தடைச் சட்டம் வெளியிடப்பட்டதனால் அத்திகதி 2021 ஒக்தோபர் 29 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டது. அறிக்கையின் தேவையான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வேன். | வருமானத்தை உழைக்கும் செயற்பாட்டிற்காக உரிய சொத்துக்களை சரியாக முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |